DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II WALAJAPET.
**DVC No.1/2019**

Deposition of Witness for – Prosecution :
Defence : **RW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் - | ஜானகிராமன் | ஜாதி | - |
| த/பெ - | ஆறுமுகம் | மதம் | - |
| கிராமம் - | மூதூர் | தொழில்- | |
| தாலுக்கா - | அரக்கோணம் | வயது - | 35/2020 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

*நாள் - 18.02.2020*

*மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை - எ.ம.சா.1*

*சாட்சியிடம் மனுதாரருக்கு எதிராக அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கின் மனு காண்பிக்கப்பட்டு சாட்சியிடம் கேட்கப்பட்டது. சாட்சி அதனை ஒப்புக்கொண்டதால், மனுதாரர் தரப்பில் அந்த மனு ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் மனுவினை நான் படித்து பார்த்தேனா என்றால், படித்து பார்த்தேன், அது பொய் வழக்காகும். மனுதாரர் தாக்கல் செய்த 12 மற்றும் 13-வது பத்தியில் கூறிய சங்கதிகளை மறுப்பு தெரிவித்து என்னுடைய பதிலுரையில் பதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் மேற்கண்ட 12 மற்றும் 13-வது பத்தியில் சங்கதிகளை மறுப்பு தெரிவித்து தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரரின் தாய்மாமன் ஏற்கனவே விவாகரத்து பெற்ற நபருடன் கள்ளதொடர்பு வைத்துக்கொண்டு என்னை வீட்டை வீட்டு வெளியே செல்லும்படி கூறிவிட்டார் என்பதற்கான ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மனுதாரர் வேலை செய்வதாக கூறியுள்ளதின் அடிப்படையில் அது*

சம்மந்தமாக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. மனுதாரர் தன்னுடைய சட்டப்பூர்வமான மனைவி என்பதால் அவர் கேட்ட பரிகாரம் கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால், சரியல்ல. நான் எனது உறவினர்களும் மனுதாரரை முதூரில் மற்றும் அரக்கோணத்திலும் வன்கொடுமை செய்தோம் என்றால், சரியல்ல. எனவே சட்டப்படி என்னையும் உறவினர்களையும் வன்கொடுமை சட்டப்படி தண்டிக்கப்படவேண்டியவர் என்றாலும் சரியல்ல. நானும் என்னுடைய உறவினர்களும் மனுதாரரின் சான்றிதழ்கள், நர்சிங் டிகிரி சான்றிதழ் மற்றும் அனைத்து ஆவணங்களையும், மனுதாரரின் துணிமணிகளை நான் வைத்துள்ளேன் என்றால், சரியல்ல, மனுதாரரின் துணிகள் மற்றும் பொருட்கள் உள்ளது, சான்றிதழ்கள் மற்றும் நகைகள் என்னிடம் இல்லை.